# இலங்கை வங்கி

**இலங்கையின் முதற்தர வங்கியுடன் இணைந்து செயலாளர் பணிகள் துறையில் உங்கள் தொழில் வாழ்க்கையை சிறப்புற அமைத்துக் கொள்ளுங்கள்!**

வங்கித் துறையில் தமது எதிர்காலத்தைக் கட்டமைத்துக் கொள்ள விரும்பும் தகைமையும் இளமைத் துடிப்பும் சாதிக்க வேண்டும் என்ற இலட்சியமும் கொண்ட நபர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## செயலாளர் உதவியாளர் - பயிலுநர்

### அடிப்படைத் தகுதிகள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**

➢ **தகைமைகள்**

- க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழி உட்பட மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் (விருப்பத்திற்குரிய பாடங்கள் தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் இரண்டு (02) பிரதான பாடங்களில் (பொது ஆங்கிலம் மற்றும் பொது அறிவு தவிர்த்து) சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

- மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றால் வழங்கப்படும் செயலாளர் பணிகள் துறையில் (ஆங்கில மொழியில்) ஆறு மாத டிப்ளோமா / சான்றிதழ் கற்கைநெறி ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

➢ **அனுபவம்**

புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் அல்லது வங்கி / நிதித் துறையில் தனிப்பட்ட உதவியாளர் / செயலாளர் உதவியாளர் / செயலாளர் பதவி வகித்த அனுபவத்தைக் கொண்டிருப்பது கூடுதல் தகைமையாகும்.

➢ **ஏனைய பண்புகள் மற்றும் தகைமைகள்**

❖ நிமிடத்திற்கு 20 சொற்கள் என்ற வேகத்தில் கணினியில் தட்டச்சு செய்யக்கூடிய ஆற்றல். சிங்களம் / தமிழ் மொழித் தட்டெழுத்துக்கான சான்றிதழை கொண்டிருப்பது கூடுதல் தகைமையாகும்.

❖ ஆங்கிலம் மற்றும் சிங்களம் / தமிழ் மொழிகளில் எழுத, பேசுவதற்கான அறிவு.

❖ இன்முகத்துடன் வெகு சரளமாகத் தொடர்பாடும் ஆற்றல்.

❖ "MS - OFFICE" பயன்பாட்டில் பாண்டித்தியம்.

➢ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 28 வயதாக அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

### விதிகளும் நிபந்தனைகளும்

❖ பயிற்சிக் காலம் (02) ஆண்டுகள் என்பதோடு அப்பயிற்சிக் காலப்பகுதிக்குரிய மாதாந்தக் கொடுப்பனவாக (1ஆம் வருடம் ரூ. 45,000/-, 2ஆம் வருடம் ரூ. 60,000/) வழங்கப்படும்.

❖ இப்பதவியானது சாதாரணவங்கித் துறைக்கு அப்பாற்பட்டது என்பதுடன் (முழு சேவை) வங்கிச் சேவையின் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

❖ வங்கி திருப்தியடையும் வகையில் ஈராண்டு காலப் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்து இப்பதவிக்கு பொருத்தமானவர் எனக் கருதப்படுமிடத்து நிரந்தரச் சேவையின் செயலாளர் உதவியாளர் - I தரத்தில் நிரந்தரமாக்கப்படுவர்.

❖ சாதாரண வங்கி வேலை நேரத்திற்கு மேலதிகமாகவும் வார இறுதி நாட்கள், விடுமுறை நாட்களிலும் பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

❖ வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக விருத்தல் வேண்டும்.

### தெரிவு நடைமுறை

போட்டித் தெரிவுப் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து நேர்முகப் பரீட்சையும் நடைபெறும். பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்:

அ. வினாத்தாள் I - கணினியில் ஆங்கிலத் தட்டச்சு வேகப் பரீட்சை (நிமிடத்திற்கு 20 சொற்கள்)

ஆ. வினாத்தாள் II - ஆங்கில மொழி

வினாத்தாள் I இல் (வேகப் பரீட்சையில்) சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே வினாத்தாள் II (ஆங்கில மொழி) பரீட்சைக்கு அழைக்கப்படுவர். போட்டிப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகள், நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியான விண்ணப்பதாரிகளை அழைப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இறுதித் தெரிவானது நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் அமையும்.

### விண்ணப்பிக்கும் முறை

❖ www.boc.lk என்ற எமது இணையதளத்தின் ஊடாக (career என்ற பகுதியின் கீழ்) உங்களுடைய விண்ணப்பங்களை 2026.06.27 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ சமர்ப்பிப்பதோடு எதிர்காலத் தொடர்புகளின் பொருட்டு "விண்ணப்பத் தொடர்பு எண்ணை வைத்துக் கொள்ளவும்.

❖ மேற்படி வங்கி இணையதளத்தின் career என்ற பகுதியில் காணப்படும் "விண்ணப்பதாரிக்கான அறிவுறுத்தல்களை" கவனமாக வாசித்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய இணையவழி விண்ணப்பத்தை நிரப்பவும்.

❖ மேற்குறித்த முறை தவிர வேறு வழிகளில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு சூழ்நிலையிலும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

❖ விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது மேலே கோரப்பட்ட தகுதி அளவுகோல்களுக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்படும்.

❖ விண்ணப்பதாரி, பதவிக்கு விண்ணப்பிக்கும் போது வங்கியின் வலைத்தளத்தின் "மனிதவள முகாமைத்துவ" பக்கத்தில் https://www.boc.lk/hr-management உள்ள ஆட்சேர்ப்புக்கான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்" பகுதியை வாசித்து அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**மனிதவளப் பிரிவு**
**இலங்கை வங்கி**
**தலைமை அலுவலகம்**
**கொழும்பு 01.**

❖ தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.

❖ தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

❖ நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

❖ வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.


உறுப்பினர்
இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்

1975 BOC CALL CENTRE
www.boc.lk

AA-(lka) Fitch Ratings, Brand Rating: AAA- (Brand Finance Lanka)
இலங்கை வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்